ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளருடைய இசைவு எதிர்பார்க்கப்படுகிறது. விராச்சி பாளையத்தில் குட்டை அமைக்கும் திட்டத்திற்காக ரூ. 1,03,000 அளவில் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளர் இசைவு தந்திருக்கிறார். ஆய்வு முடிந்த பிறகு அரசாங்க அளவில் நடவடிக்கை எடுக்கப் படும். ஊத்துக்குளி கிராமத்தினருகே 21,000 ரூபாய் மதிப்பீட்டில் குட்டை அமைக்கும் திட்டம் ஈரோடு நிர்வாகப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் நீர் ஊற்றுக்கள்

* 202 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை **அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—**

தஞ்சை மாவட்டத்தில் விவசாய நிலங்களில் நீர் ஊற்றுக்களைக் கண்டு பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் . . . .

(சில உறுப்பினர்கள் குறுக்கே நடந்து சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது உறுப் **பினர்கள் குறுக்கே போகக் கூடாது. உறுப்பினர் என்ன கேட்கிறார் என்பது** சரியாகக் கேட்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் தற்போது குடந்தை தாலுகாவில் பந்தநல்லூர் பகுதியில் ஆர்டிஷியன் வெல்கள் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் கோடை காலத்தில்கூட நிறைய **தண்ணீர்** வழங்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும், குறிப்பாக மாயூரம், சீர்காழி போன்ற தாலுகாக்களுக்கும் இதை விரிவுபடுத்தி உடனடியாக செயல்படுத்த அரசாங்கத்திடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ? செயற்குறிப்பு இல்லையெனில் உடனடியாக அமல் படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நில நீர் ஆய்வுப் பணிகளின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்கும் திட்டம் பொதுப்பணித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவை யுனைடெட் நேஷன்ஸ் டெவலப்மெண்ட் ஆர்கனைசேஷன் மூலம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை.

திரு. எஸ். கணேசன் : தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இப்படிப்பட்ட நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சை மாவட்டம் பூராவும் இதுபற்றிப் பரிசீலனை நடந்து வருகிறது.

So far, 262 bore-holes, totalling a length of 92,442 ft. of exploratory drilling, has been done to identify and demarcate the different acquifers in width and depth. 229 Nos. of pump tests have been done to evaluate the acquifer characteristics. About 2,719 water samples have been analysed for quality study. 85 observation wells are being regularly observed for water level fluctuation and quality; 161 bore-holes have been electrically logged and 936 depth soundings have been taken; 27 wells drilled by Central Ground Water Board have been logged and advice given regarding well assembly details. 50 infiltration tests have been carried out. Two meteorological stations have been established. Samples have been collected by Tata Fundamental Research Institute, Bombay, for water dating. An analog model was made to study the spacing of wells by the Indian Institute of Technology, Madras, at the request of United Nations Development Programme.

Ground water potential is shallow acquifer in Cauvery sub-basin, Vennar sub-basin and new delta and deep acquifer in Orathanadu and Cauvery and Vennar sub-basin.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, is there any aid given by the Centre for the scheme and is there aid given by the United Nations for the successful implementation, and if so, what is the percentage ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆய்வுப் பணிகளுக்கு மாத்திரந்தான் ஐக்கிய நாட்டு உதவி கிடைத்தது. இம்ப்ளிமென்டேஷனுக்கு உதவி கிடைத்ததாகத் தகவல் இல்லை.

திரு. டி. வி. சம்பத் : சீர்காழி வட்டத்தில் காவேரி கடைமடைப் பகுதிக்குக் காலஞ்சென்ற வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் வருகை தந்தபோது ஆற்று நீரை எடுத்து கடைமடைப் பகுதிக்குப் பாசனம் செய்வதற்கு வழி செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார். அது பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்களைச் சோதிக்கிற மாதிரி கேள்வி போட்டால் எப்படி ?

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் தாலுகாவில் மண்ணிப்பள்ளம் என்ற ஊரில் ஆர்டிஷியன் வெல்கள் இயங்கி வந்தன. அதிலிருந்து சரியான முறையில் தண்ணீர் கிடைத்த நிலையில் கூட சில ஆண்டுகளாக அவை இயங்கவில்லை. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியும் இன்னும் இயங்காத நிலையில்தான் இருந்து வருகிறது. அந்த ஊரில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் காரணத்தால் மீண்டும் அவற்றைச் செயல்படுத்துவதற்கு நமது அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வியின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Development of Ports

* 203 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether the Government have requested the Centre to allot funds for the development of Nagapattinam harbour as a major port by constructing an artificial harbour; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) இல்லை. மேஜர் போர்ட்டாக—பெரிய துறைமுகமாக ஆக்கப்படுவதற்குப் போதிய ஏற்றுமதி இறக்குமதி இல்லை.

மு.ப.
10–00

திரு. என். கே. பழனிசாமி : நாகப்பட்டினம் துறைமுகம் அவசியம் என்பதை எல்லோரும் உணருவார்கள். அதன் அடிப்படையில் செயற்கைத் துறைமுகமாக அதை அமைப்பதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் கொடுத்தார்களா ? திட்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நாகப்பட்டினத்தை மேஜர் போர்ட்டாக ஆக்கும் அளவிற்கு ஏற்றுமதி இறக்குமதி இல்லையென்று சொன்னேன்.